பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 30 திங்கட்கிழமை 12.04.2021 கதிர் 26

## ‘கொரோனா’ குறித்து ஆராய யாழ். வந்தார் இராணுவத் தளபதி

(எஸ்.நிதர்ஷன்)

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா யாழ்ப்பாணத்துக்கு இன்று திடீர் பயணம் மேற்கொண்டுள்ளார்.

கொரோனா நிலைமைகள் தொடர்பாக ஆராயும் வகையிலேயே அவர் இங்கு வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. ☞ 2

# வெளிநாட்டுத் தொடர்பைக் கொண்ட சிலரே இராணுவத்துக்கு எதிராக பொய்ப் பிரசாரம்



**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

**இலங்கை இராணுவம் தமிழ் மக்களுக்கு மனிதாபிமான ரீதியிலான பணிகளையே முன்னெடுக்கின்றது. ஆனால், வெளிநாட்டுத் தொடர்புகளைக் கொண்டுள்ள சிலரே இராணுவம் தொடர்பில் பொய்யான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். உண்மையில் இராணுவம் என்ன செய்கின்றது என்பதைத் தமிழ் மக்கள் அறிவார்கள்.**

**- இவ்வாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.** ☞ 2

## தோல்விப் பயத்தால் தேர்தலுக்கு பின்னடிக்கின்றது ராஜபக்ஷ அரசு

### சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு



பரம்பரை அரசியல் கேள்விக்கு உட்படுத்தப்படும் என்ற அச்சத்தில் ராஜபக்ஷ அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்த அஞ்சுகின்றது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் ☞ 2

## மீசாலையில் கழுத்தை நெரித்து வயோதிபரை கொலை செய்துவிட்டு துணிகரக் கொள்ளை!

### ஒன்றரை லட்சம் ரூபா பணமும் நகைகளும் ‘அபேஸ்’

**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

யாழ்., தென்மராட்சி, மீசாலை கிழக்கில் நேற்றிரவு வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளைக் கும்பலின் துன்புறுத்தலுக்கு இலக்காகி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வயோதிபத் தம்பதி வசிக்கும் குறித்த வீட்டுக்குள் புகுந்த மூவர் கொண்ட கொள்ளைக் கும்பல் அவர்கள் இருவரையும் கட்டி வைத்து துன்புறுத்தியுள்ளனர்.

அதன்போது, கயிற்றால் கழுத்தை ☞ 2



## போலிப் பிரசாரத்தை கட்டுப்படுத்தச் சட்டம்

### இந்த வாரம் அமைச்சரவைக்கு

இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களின் ஊடான போலிப் பிரசாரங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய சட்டத்தைக் கொண்டு வர அரசு தயாராகி வருகின்றது.

அதற்கமைய நீதி அமைச்சு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு இணைந்து சட்டக் கோவை ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது எனத் தெரியவருகின்றது. ☞ 2

## உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் 80 பேருக்கு எதிராக இலஞ்ச, ஊழல் மோசடி விசாரணைகள்

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக உள்ள 80 அரசியல்வாதிகள் மீது இலஞ்ச, ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் பிரதேச சபை மற்றும் நகர சபை உறுப்பினர்கள் என ஆணைக்குழுவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களில் ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்குக் கல்வித்துறை தொடர்பில் அதிகளவு எண்ணிக்கையிலான புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும் ஆணைக்குழு அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கா எச்சரிக்கை

சீனாவின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படும் கொழும்புத் துறைமுக நகரம் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் ‘பணச் சலவை’ மோசடியின் புகலிடமாக மாறும் அபாயம் உள்ளது என அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் எச்சரித்துள்ளார்.

துறைமுக நகரத்தின் நெகிழ்வுத் ☞ 2

## 500 மில்லியன் டொலர் கடன் ஒப்பந்தம்: சீனாவுடன் இலங்கை அரசு கைச்சாத்து

சீனாவின் அபிவிருத்தி வங்கியுடன் 50 கோடி அமெரிக்க டொலர் கடன் ஒப்பந்தத்தில் இலங்கை அரசு கைச்சாத்திட்டுள்ளது.

பீஜிங்கில் உள்ள இலங்கை தூதரகத்தில் வைத்து சீனாவுக்கான இலங்கை தூதுவர் பேராசிரியர் பாலித கொஹன குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

இதனிடையே, குறித்த நிதி இந்த வாரம் கிடைக்கப்பெறும் என நிதி அமைச்சு அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் அரசின் செயற்பாடுகளுக்கு குறித்த நிதி பங்களிப்புச் செய்யும் ☞ 2

## மே மாதத்தில் கொரோனாவின் 3ஆவது அலை: எதிர்கொள்ளத் தயாராக வேண்டும் இலங்கை!

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான சுகாதார வழிகாட்டுதல்களைப் பொது மக்கள் பின்பற்றத் தவறியுள்ள நிலையில், மே மாதத்தில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலை இலங்கையைத் தாக்கும் அபாயம் உள்ளது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தால் பல முறை எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் பொதுமக்கள் ☞ 2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 500 மில்லியன் டொலர் கடன் ஒப்பந்தம்: ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என அறிவிக்கப்பட்டுள்ளது.

10 லட்சம் அமெரிக்க டொலர் கடன் தொகையின் ஒரு பகுதியாக குறித்த நிதி வழங்கப்பட்டுள்ளது எனவும், ஏற்கனவே கடந்த ஆண்டு 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்கப்பட்டது எனவும் நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

## போலிப் பிரசாரத்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த வாரம் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சமூகங்களுக்கு இடையே குரோதத்தை ஏற்படுத்தும் மற்றும் வெறுப்புணர்வுகளைத்தூண்டும்வகையிலான பிரசாரங்களை முன்னெடுத்தல், இரு நாடுகளுக்கு இடையிலான உடன்படிக்கைகள் மற்றும் நட்புறவுச் செயற்பாடுகள் குறித்து பொய்யான பிரசாரங்களைப் பரப்புதல், இனவாத, மதவாத கருத்துக்களைப் பரப்புதல், நிதி விடயங்களில் பொய்யான கருத்துக்களைப் பரப்புதல் உள்ளிட்டவிடயங்களில்கட்டுப்பாடுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனக் கூறப்படுகின்றது.

## மீசாலையில் கழுத்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நெரித்ததில் 80 வயதுடைய செல்லையா சிவராசா என்பவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, கொள்ளையர்கள் வீட்டிலிருந்த ஒன்றரை லட்சம் ரூபா பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## 'கொரோனா' குறித்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். மாவட்டத்தில் தற்போது அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வரும் நிலையில், கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயலணியின் பிரதானி என்ற வகையில் இராணுவத் தளபதி இங்கு வந்து நிலைமைகளை ஆராய்கின்றார்.

இதன்போது பல்வேறு தரப்பினருடன் கொரோனா நிலைமை குறித்து அவர் கலந்துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, யாழ். மாவட்டத்தின் பாதுகாப்பு குறித்தும் இராணுவத் தளபதி அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

## வெளிநாட்டுத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போரின்போது, குடும்பத் தலைவனை இழந்த பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு யாழ்ப்பாணத்தில் இராணுவத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள வீடொன்றை இன்று திறந்துவைத்தபின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை இராணுவமானது ஒரு மனிதாபிமான இராணுவமே ஆகும். இதனை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமிழ்மக்கள் நன்கு அறிவார்கள். ஆனால், வெளிநாட்டில் இருப்பவர்கள் இங்கு குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் இங்குள்ளவர்களுக்குப் பணத்தை அனுப்பி இராணுவத்தினர் தொடர்பாகப் பொய்யான பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போதைய கொரோனா நிலவரம் குறித்து அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளேன். இதன்படி தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் தமிழ் - சிங்கள புத்தாண்டுவர இருக்கின்றது. எனவே, தற்போதைய நிலைமையில் பொதுமக்கள் தமது புத்தாண்டை மிகவும் அமைதியான முறையில் கொண்டாடுவது மிகவும் சிறந்தது - என்றார்.

## மே மாதத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதனைப் பொருட்படுத்தாது தமது அன்றாடச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் அதிகரித்துவரும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் மே மாதத்திலிருந்து தோன்றும் புதிய கொரோனாக் கொத்தணிகளைச் சமாளிக்க அதிகாரிகள் இப்போதிருந்தே மருத்துவமனைகளைத் தயார் செய்ய வேண்டும் என்றும் சங்கத்தின் செயலாளர் எம்.பாலசூரிய தெரிவித்துள்ளார்.

திருமதி இலங்கை சர்ச்சை, சுற்றுச்சூழல் பிரச்சினை மற்றும் நஞ்சுப் பொருள் அடங்கிய எண்ணெய்ப் பிரச்சினை ஆகியவற்றின் பின்னணியில் அதிகரித்து வரும் மிகத் தீவிரமான கொரோனா வைரஸ் பிரச்சினை மறைக்கப்பட்டு விட்டது எனவும் மகேந்திர பாலசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் விளைவாக கொரோனா வைரஸ் தற்போது இல்லை என்ற எண்ணத்தில் பொதுமக்களும் செயற்படுகின்றனர் எனவும், ஏற்கனவே கொரோனா குறித்து மக்களிடம் இருந்த அச்சத்தை மீண்டும் ஏற்படுத்துவது கடினம் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த நிலைமை மிகவும் துரதிஷ்டவசமானது. மூன்றாவது அலை நம்மைத் தாக்கும்போது மட்டுமே இது எவ்வளவு தீவிரமானது என்பதை அவர்கள் புரிந்துகொள்வார்கள்.

எனினும், இப்போது காலம் கடந்துவிட்டது. ஏற்படப்போகும் விளைவுகளைச் சந்தித்து அதைச் சமாளிக்கத் தயாராக வேண்டும். அத்தோடு இந்த நிலைமைக்குப் பொதுமக்களும் அதிகாரிகளுமே பொறுப்பு.

தடுப்பூசி போட்டுக்கொள்வதால் கொரோனாவிலிருந்து நூறு சதவீத பாதுகாப்பு கிடைக்கின்றது என மக்கள் கருதுகின்றார்கள். ஆனால், உலக நாடுகளில் பெரும்பாலானவர்களுக்குத் தடுப்பூசி போடப்பட்ட போதிலும் 3ஆவது மற்றும் 4ஆவது அலைகள் ஏற்பட்டுள்ளன. இதன் விளைவாக புதிய பூட்டுதல்கள் செயற்படுத்தப்படுகின்றன என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும். - என்றார்.

## அமெரிக்கா .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தன்மையான வர்த்தக விதிகளை மோசமான சக்திகள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்புத் துறைமுக ஆணைக்குழு வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள வரிச் சலுகைகள், வரி அற்ற சம்பள முறைகள் மற்றும் வெளிநாட்டு நிதியை அனுமதிக்கும் ஒழுங்குகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இதனைக் கூறியுள்ளார்.

துறைமுக நகரம் தொடர்பான சட்டங்கள் அதன் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் மிகக் கவனமாகப் பார்க்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

சட்ட விரோத மற்றும் பண மோசடியில் ஈடுபடுபவர்கள் இந்த வணிகச் சூழலைப் பயன்படுத்தி, மோசமான நடவடிக்கைகளுக்கான புகலிடமாக அமைத்துக் கொள்ளும் அபாயம் இருக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்படி நிலைமைகளைத் தடுக்கும் விதமான சட்ட ஏற்பாடுகள் அவசியம் எனவும் அலெய்னா டெப்லிட்ஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

# பெண்கள் குளிப்பதை படம் எடுத்த அநாமேதயக் குழு தப்பியோட்டம்

## திருமலை ரொட்டவெவவில் சம்பவம்

திருகோணமலை, ரொட்டவெவ கிராமத்தில் இரவு நேரங்களில் வீடுகளுக்குள் கல்லெறிதல் மற்றும் பெண்கள் குளிப்பதை படம் மற்றும் வீடியோக்கள் எடுத்தல் போன்றவை இடம்பெற்று வருவதாக பொது மக்கள் மத்தியில் அண்மைக் காலமாகப் பரபரப்பாக பேசப்பட்டு வந்தது.

இந்நிலையில், நேற்றிரவு பெண்ணொருவர் தனது வீட்டுக் குளியலறையில் குளித்துக் கொண்டிருந்த போது, நால்வர் கொண்ட குழு, அலைபேசியில் வீடியோ எடுப்பதைக் கண்டு, அலறியுள்ளார்.

பெண்ணின் கதறல் சத்தம் கேட்டு ஒன்றுகூடிய அயலவர்கள் அக் குழுவினரைத் துரத்திச் சென்றுள்ளனர்.

எனினும், அவர்கள் தப்பியோடியுள்ளனர். இருந்த போதும், அவர்களது செருப்புகள், பெண்ணின் வீட்டின் வளவுக்குள் கழற்றி வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

பெண்ணின் உறவினர்கள் மொரவெவ பொலிஸ் நிலையத்துக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியமையை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், தப்பியோடியவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கையாக செருப்புகளை எடுத்துச் சென்றுள்ளனர்.



இவ்விடயம் தொடர்பாக பெண் முறைப்பாடு செய்துள்ளார் எனவும் இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்ட நால்வரும் சிறுவர்கள் எனத் தாம் சந்தேகிக்கின்றனர் எனவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

## தோல்விப் பயத்தால் தேர்தலுக்கு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவரிடம் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறுவது சம்பந்தமாக எங்களுக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை. எந்த முறையில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும், எப்போது நடத்தப்பட வேண்டும் என அரசு தீர்மானித்தால் நாங்கள் அந்த மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம்.

குறிப்பாக மாகாண சபை என்பது வடக்கு, கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்வதற்கான ஓர் ஆரம்பப் புள்ளியாகவே கொண்டுவரப்பட்டது. அந்த அடிப்படையில் மாகாண சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும்.

அது என்ன முறையில் நடத்தப்பட வேண்டும், எப்போது நடத்தப்பட வேண்டும் என்பதற்கு அப்பால், விரைவாகவும் வேகமாகவும் அந்த மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

இந்தத் தேர்தலை நடத்தி மாகாண சபைகளில் அதிகாரப் பரவலாக்கல், அதன் ஊடான மக்கள் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் 19ஆம் திகதி அரசால் தீர்மானிக்கின்ற திகதியென்பது பலமுறை அவர்களால் சொல்லப்பட்ட செய்திகள். இன்னுமின்னும் அதன் காலம் இழுத்தடிக்கப்படலாம். காலத்தை இழுத்தடிக்காமல் உடனடியாக முடிவு எடுக்கப்பட வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். விரக்தி அடைந்திருக்கின்ற சிங்கள மக்கள் அரசுக்கு எதிராகக் கட்டாயம் வாக்களிப்பார்கள். அந்த வாக்களிப்பு என்பது இந்த அரசை கட்டாயம் ஆட்டம் காணச் செய்யும்.

அடுத்து அவர்களின் அரசியல் பாரம் பரியம் அல்லது பரம்பரை அரசியல் என்பது கேள்விக்கு உட்படுத்தப்படும் என்ற பயத்தின் காரணமாகவே அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்தப் பின்னடிக்கின்றது - என்றார்.

## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சபாநாயகரும் பக்கச் சார்பும்

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, நாடாளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக பெருங்குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்துள்ளது.

கொலைக் குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பிரதியமைச்சரும் தற்போதைய ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான பிரேமலால் ஜெயசேகரா நாடாளுமன்றுக்கு வருகை தந்து தமது எம்.பி. பதவிக் கடமைகளை நிறைவேற்ற அனுமதி அளித்த சபாநாயகர், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு நான்கு வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட எதிரணி எம்.பியான நடிகர் ரஞ்சன் ராமநாயக்காவுக்கு அந்த அனுமதியை வழங்க மறுத்து, அவர் எம்.பி.பதவியை இழக்கச் செய்து விட்டார் என்பதே அக்குற்றச்சாட்டு.

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விடயத்தில் ஒரு மாதிரியாகவும், எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் விடயத்தில் பிறிதொரு மாதிரியாகவும் பக்கச்சார்பாக சபாநாயகர் நடக்கின்றார், இது ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடையே மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது என்பது அவர்களின் குற்றச்சாட்டு.

“எதிர்க் கட்சிப் பிரேரணை என்றவுடன் அதனை எதிர்க்கின்றீர்கள். அதனை வேண்டும் என்றே புறக்கணிக்கின்றீர்கள். இதனை நாம் பலமுறை அவதானித்துள்ளோம். உங்கள் நடவடிக்கை நாடாளுமன்றத்தின் கௌரவத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். நீங்கள் பொதுஜன முன்னணியின் அரசியலைக் கொண்டு நடத்துகின்றீர்கள். நாடாளுமன்றின் 225 உறுப்பினர்களினதும் சபாநாயகர் என்ற முறையில் சபாநாயகர் பதவியின் நடுநிலைப் பண்பையும் கௌரவத்தையும் நீங்கள் பேண வேண்டும்” என்று ஐக்கிய மக்கள் சக்தி, சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இதே விவகாரத்தை ஒட்டி சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவது குறித்தும் ஐக்கிய மக்கள் சக்தி ஆலோசிப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆளும் தரப்புக்கு உள்ள அதீத பெரும்பான்மை நிலையில் இப்படி சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து வெல்ல வைப்பது என்பது இயலாத காரியம். ஆனாலும் சபாநாயகரின் செயற்பாடுகள் குறித்து எதிரணியினர் வெளிப்படையாகப் பேசவும், விமர்சிக்கவும் அத்தகைய பிரேரணை மூலம் ஒரு தளம் கிடைக்கும். அவ்வளவுதான்.

சரி, இப்போது பிரதான எதிரணி குறிப்பிடுகின்றமை போல, இந்த எம்.பிக்களின் விடயத்தில் உண்மையில் சபாநாயகர் பக்கச் சார்பாக நடந்துள்ளார் என்று விமர்சிக்க முடியுமா? ‘ஒரு கண்ணில் வெண்ணெய்யும் மறுகண்ணில் சுண்ணாம்பும் தடவும்’ தந்திரோபாயத்தை சபாநாயகர் கையாளுகின்றார் என வர்ணிக்கலாமா?

எதிரணியின் குற்றச்சாட்டில் சட்ட ரீதியாக ஓட்டைகள் இருப்பது அவதானிக்கத்தக்கது.

கொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட, பிரேமலால் ஜெயசேகரா நாடாளுமன்றுக்கு வர அனுமதிக்கப்பட முடியாது என்றுதான் சட்டமா அதிபர் அறிவித்தார். ஆனாலும் அந்த சட்ட ஆலோசனையை – பரிந்துரையை – நிராகரித்துத்தான் பிரேமலால் ஜெயசேகராவை நாடாளுமன்றுக்கு வர அனுமதித்தார் சபாநாயகர்.

பிரேமலால் ஜெயசேகராவின் விடயத்தில் இன்னொரு அவதானிக்கப்பட வேண்டிய முக்கிய விவகாரம் உண்டு. அவருக்கு மரண தண்டனைத் தீர்ப்பை மேல் நீதிமன்றம் வழங்கியது. அவர் கொலையாளி என அது தீர்ப்பளித்தது. ஆனால் அது முடிந்த முடிவல்ல. சட்டத்தின் இறுதித் தீர்மானமும் அல்ல. அந்த முடிவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும், அது சரிவராவிட்டால் உயர் நீதிமன்றத்திலும் அத்தண்டனைத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யவும், தீர்ப்பைத் தலைகீழாகப் பெறுவதற்கும் இன்னும் வாய்ப்புகள் தாராளமாக உள்ளன. அந்த வாய்ப்புகளை அவர் பயன்படுத்தவும், இனிமேல் அவர், கொலைக் குற்றச்சாட்டில் இருந்து தம்மை விடுவிக்க வழியில்லை என்பது உறுதிப்படுத்தப்படும் வரையிலும் அவருக்கு சந்தர்ப்பம் வழங்க சபாநாயகர் இடமளித்துள்ளார்.

ஆனால், ரஞ்சன் ராமநாயக்கா வழக்கு அப்படியல்ல. அவருக்கு தண்டனைத் தீர்ப்பை வழங்கியது நாட்டின் உச்ச நீதிமன்றமான உயர் நீதிமன்றமே. அதற்கு மேல் தீர்ப்பை மாற்றும் மேலதிகாரம் வேறு நீதிமன்றங்களுக்கு இல்லை. தமது தண்டனைத் தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்திலேயே ரஞ்சன் ராமநாயக்கா முன்வைத்த மீளாய்வு மனு நிராகரிக்கப்பட்டு விட்டது. மேன்முறையீட்டு மனு ஒன்றும் ரஞ்சன் ராமநாயக்கா தரப்பில் உயர்நீதிமன்றத்தில் வைக்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் அது இதுவரை அப்படி முன்வைக்கப்படவுமில்லை. நீதிமன்றம் அத்தகைய ஒரு மேன்முறையீட்டை விசாரணைக்கு ஏற்கவுமில்லை. அதற்கான சட்ட வாய்ப்பு இருப்பதும் உறுதியில்லை.

அதே நேரம், ரஞ்சனுக்கு விதிக்கப்பட்ட தண்டனை காரணமாக அவர் எம்.பி. பதவியை இழக்கின்றார் என உத்தரவிடுவதைத் தடுக்கக் கோரி ரஞ்சன் ராமநாயக்கா சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவும் நிராகரிக்கப்பட்டு விட்டது.

இந்தப் பின்புலத்தில் சபாநாயகரின் முடிவு பக்கச் சார்பானது என்று கூறுவது பொருத்தமற்றது.

# எமது சமூகத்தின் செயற்பாட்டால்தான் சஹ்ரான் குழு தோற்றம் பெற்றது

## ஹக்கீம் எம்.பி. தெரிவிப்பு



சஹ்ரான் குழு எமது சமூகத்தின் செயற்பாட்டால்தான் உருவானதை சகலரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாடறிந்த கல்விமானும் முன்னாள் கல்வி அதிகாரியுமான மருதமுனையைச் சேர்ந்த மர்ஹூம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்களது கல்வி சமூக சமய அரசியல் மற்றும் கலாசார பணிகளை புதிய தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்கும் வகையில் சட்டத்தரணி றுடானி ஸாஹிர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அபுல் கலாம் ஐ.எம்.எஸ்.எம்.பழீல் மௌலானா வாழ்வும் பணியும் (1920 – 2013) நூல் கடந்த சனிக்கிழமை மாலை மருதமுனை, பொது நூலக கேட்போர் கூடத்தில் பழீல் மொலானா பவுண்டேனின் ஏற்பாட்டில் செனட்டர் மசூர் மௌலானா அரங்கில் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதிதியாகக் கலந்து கொண்டு மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் தனது கருத்தில் கூறியவை வருமாறு –

கூலிக்கு அமர்த்தப்பட்ட சஹ்ரான் குழு எமது சமூகத்தின் செயற்பாட்டினால் தான் உருவானதை சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது உள்விவகாரங்களைப் பற்றிப் பேச வேண்டும். எமது உள்விவகாரங்களில் உள்ள விமர்சனங்களைப் பற்றிப் பேசப்போனால் எத்தனை மணித்தியாலம் எடுக்குமோ தெரியாது. அதாவது ஏராளமான உள்முரண்பாடுகளுடன் வாழ்ந்து வருகின்றோம். புரிந்துணர்வும் சகிப்புத் தன்மையும் எம்மிடையே இல்லாமல் போவதைக் காண்கின்றோம். இவ்வாறாகத் தறுதலைத் தனமாக ஒரு கும்பல் செய்த செயலையே இந்த நாடு பேசிக்கொண்டிருக்கின்றது.– என்றார்.

# 13 கிலோ ஐஸ் போதையுடன் ஜா – எலவில் 6 பேர் கைது



ஜா–எல, நிவந்தம பிரதேசத்தில் 13 கிலோ கிராம் ஐஸ் ரக போதைப்பொருளுடன் இரண்டு பெண்கள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்போதைப்பொருள் தடுப்பு பணியக அதிகாரிகளால் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹன தெரிவித்தார்.

ஹெரோயின் தொடர்பில் சுற்றிவளைப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து ஐஸ் போன்ற போதைப்பொருள்களை இந்நாட்டுக்குக் கொண்டு வருவது அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோதமாக அகழ்ந்து குவிக்கப்பட்ட கிரவல்; முல்லையில் கிராம அலுவலரின் மனைவி கைது



முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கருவேலன்கண்டல் கிராம அலுவலர் பிரிவில் மானுருவி பகுதியில் அனுமதிப்பத்திரம் அற்ற காணி ஒன்றில் சட்டவிரோதமாக கிராம அலுவலர் ஒருவரால் பாரிய அளவில் கிரவல் அகழ்ந்து குவிக்கப்பட்டுள்ள போதும் இதற்கு எதிராகத் திணைக்களங்கள் எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படடிருந்தது.

இந்நிலையில் களத்தில் குதித்த ஒட்டுசுட்டான் பொலிஸார் அங்கு சட்டவிரோதமாக அகழ்ந்து குவிக்கப்பட்டிருந்த சுமார் 750 டிப்பர் லோட் கிரவலைத் தமது ஆளுகையின் கீழ் கொண்டுவந்தமையுடன் குறித்த காணிக்கு உரிமை கோரிய கிராம அலுவலரின் மனைவியையும் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில் –

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கருவேலன்கண்டல் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட மானுருவி பகுதியில் அனுமதிப்பத்திரம் அற்ற காணி ஒன்றில் சட்டவிரோதமாக கிராம அலுவலர் ஒருவரால் பாரிய அளவில் கிரவல் அகழ்ந்து குவிக்கப்பட்டுள்ள போதும் இதற்கு எதிராக திணைக்களங்கள் எதுவும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது

இந்நிலையில் நேற்று மாலை சம்பவ இடத்திற்குச் சென்ற ஒட்டுசுட்டான் பொலிஸார் குறித்த கிரவல் குவித்து வைக்கப்பட்டிருந்த இடங்களைப் பார்வையிட்டமையோடு அந்த இடம் தொடர்பிலும் இங்கு கிரவல் யார் அகழ்ந்தது என்பது தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்தனர் இதன்போது குறித்த பகுதியில் கிராம அலுவலர் ஒருவரே கிரவல் அகழ்வை மேற்கொண்டனர் என அயலவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் அந்தப் பகுதி கிராம அலுவலர் மற்றும் கிரவல் அகழ்வில் ஈடுபட்ட கிராம அலுவலர் ஆகியோரை பொலிஸார் சம்பவ இடத்துக்கு அழைத்து இருந்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கருவேலங்கண்டல் கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலர், குறித்த காணி அனுமதிப்பத்திரம் இல்லை எனவும் அவ்வாறான நிலையிலேயே அந்தக் காணியில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் குறித்த அகழ்வில் ஈடுபட்ட கிராம அலுவலருடைய மனைவியினுடைய தந்தையின் காணி எனவும் தந்தையார் மகளுக்கு அதாவது கிரவல் அகழ்வில் ஈடுபட்ட கிராம அலுவலரின் மனைவிக்கு வழங்கி இருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்ட போதும் குறித்த காணிக்கான ஆவணங்கள் இல்லை எனவும் அந்தக் காணி ஆவணத்துக்கு பிரதேசத்தில் விண்ணப்பம் செய்யப்பட்டிருப்பதாகவும் குறித்த கிரவல் அகழ்வுக்கு அனுமதி பெறப்படவில்லை என்பது தொடர்பிலும் பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

இந்த நிலையில் மேற்படி காணியின் உரிமையாளரான கிராம அலுவலருடைய மனைவியிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் அவர் இந்த அகழ்வு நடவடிக்கைக்காக எந்தவிதமான ஓர் அனுமதியையும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதும் அந்தக் காணியை விவசாய தேவைக்காக சுத்தம் செய்வதற்காக பிரதேச செயலகத்திற்கு செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் பிரதியை மாத்திரம் காட்டிய நிலையில் அகழ்வு மற்றும் களஞ்சியப்படுத்தல் சட்டத்துக்குப் புறம்பாக செய்யப்பட்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கிராம அலுவலருடைய மனைவி தற்போது ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையம் அழைத்து வரப்பட்டு ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.பி.எஸ்.இ. தேர்வை ரத்து செய்யக் கோரி

## மத்திய அரசுக்கு பிரியங்கா கடிதம்



கொரோனா காலத்தில் மாணவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வது சாத்தியம் இல்லை என்பதால் சி.பி.எஸ்.இ. தேர்வுகளை இரத்து செய்ய வேண்டும் என்று மத்திய அரசை காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி வலியுறுத்தியுள்ளார்.

சி.பி.எஸ்.இ. 10 ஆம் வகுப்புத் தேர்வுகள் மே 4 முதல் ஜூன் 7 வரை நடைபெறும் என்றும் சி.பி.எஸ்.இ. 12 ஆம் வகுப்புக்கான தேர்வுகள் மே 4 முதல் ஜூன் 15 வரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், சி.பி.எஸ்.இ. தேர்வுகளை ரத்து செய்ய வேண்டும் என்று பிரியங்கா காந்தி, மத்திய கல்வித்துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியாலுக்கு கடிதம் எழுதியுள்ளார்

நாடு முழுவதும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டு வரும் நிலையில், மாணவர்களை தேர்வு எழுத வைப்பது அவர்களுக்கு தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்தும் என்று அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். தேர்வு மையத்தில் நிறைந்திருக்கும் மாணவர்களுக்கு கொரோனாத் தாக்குதல் ஏற்பட்டு அது தீவிரப் பகுதியாக மாறினால் அதற்கு மத்திய அரசும் சி.பி.எஸ்.இ. வாரியமும் தான் பொறுப்பேற்க வேண்டும் என்றும் பிரியங்கா காந்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

நோயால் பாதிக்கப்படக்கூடிய மாணவர்களுக்கோ அல்லது பிறருக்கோ ஏற்படுகிற பிரச்சினைகளுக்கு மத்திய அரசும் சி.பி.எஸ்.இ. வாரியமும் சட்டபூர்வமாக பொறுப்பேற்க தயாராக உள்ளனவா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். கூட்டம் கூடுகிற தேர்வு மையங்களில் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது சாத்தியம் இல்லை என்பதால் சி.பி.எஸ்.இ. தேர்வுகளை ரத்து செய்வதுதான் ஒரே வழியாகும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையே பிரியங்கா காந்தியின் கருத்துக்கு அவரது சகோதரரும் காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்தி ஆதரவு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள ராகுல் காந்தி, 'பேரழிவு தரும் கொரோனாவின் இரண்டாவது அலையில் சி.பி.எஸ்.இ. தேர்வுகளை நடத்துவது குறித்து மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். கடுமையான முடிவுகளை எடுப்பதற்கு முன் அனைத்துத் தரப்பினரையும் அரசு கலந்தாலோசிக்க வேண்டும். இந்திய இளைஞர்களின் எதிர்காலத்துடன் மத்திய அரசு எவ்வளவுதான் விளையாட விரும்புகிறது? என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

# கர்நாடகா போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தம் போராட்டக்காரர்களை பணி நீக்கம் செய்கிறது அரசு



கர்நாடகத்தில் ஊதிய உயர்வு உட்பட 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி போக்குவரத்துக் கழக ஊழியர்கள் கடந்த 7 ஆந்திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போக்குவரத்து ஊழியர்கள் பணிக்குத் திரும்ப வேண்டும் என்றும் இல்லையெனில் எஸ்மா சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசு எச்சரித்துள்ளது. ஆனால் வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிட ஊழியர்கள் மறுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களை பணிக்குத் திரும்பும்படி கோரி அதிகாரிகள் தொடர்ந்து கடிதம் அனுப்பி வருகின்றனர். மேலும் பணிக்குத் திரும்பாத ஊழியர்களைப் பணி இடமாற்றம் செய்யும் திட்டத்தினையும் அதிகாரிகள் நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளனர். முதல் கட்டமாக, உத்தியோகபூர்வமாக அறிவித்தும் பணிக்குத் திரும்பாத 118 ஊழியர்களை வேலையில் இருந்து அரசு நீக்கியிருந்த நிலையில், நேற்று முன்தினம் ஒரே நாளில் 216 ஊழியர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டு இருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

இதற்கிடையில், பணிக்கு வராத ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாது என்ற உத்தியோக பூர்வ அறிவித்தலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் 55 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்கள் தங்களது உடல் தகுதி குறித்த சான்றிதழ்களை வழங்கவும் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். அவ்வாறு சான்றிதழ் வழங்காத ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் அவர்களை வேலையில் இருந்து நீக்குவதற்கான முயற்சிகளிலும் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கர்நாடகத்தில் போக்குவரத்து ஊழியர்களின் தொடர் வேலை நிறுத்தத்தால் கர்நாடக அரசுக்கு நாள் ஒன்றுக்கு 20 கோடி ரூபா வருவாய் இழப்பு ஏற்பட்டு வருவதாகவும், அரசு பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருப்பதால் அவர்கள் கோரும் சம்பள உயர்வினை வழங்க முடியாது என்றும் அரச தரப்பு கூறியுள்ளது.

# தி.மு.க. வெற்றி உறுதி செய்யப்பட்டு விட்டது நாஞ்சில் சம்பத் நாகப்பட்டினத்தில் பேட்டி



தி.மு.கவின் தேர்தல் பேச்சாளராக செயற்பட்ட நாஞ்சில் சம்பத், பொது நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்வதற்காக நாகப்பட்டினத்திற்கு வந்திருந்தபோது ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர், தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சிகள் அமோக வெற்றி பெறும் என கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. கருணாநிதி பெற்ற வெற்றிகளை தாண்டி தி.மு.க. தலைவர் ஸ்டாலின் வரலாறு படைப்பார். தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சிகளிடையே பிளவு ஏற்படாமல் தொகுதிகளை சரியான முறையில் பங்கீடு செய்து கொடுத்து ஸ்டாலின் தனது ஆளுமைத் திறனை நிருபித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்பே திட்டமிட்டு கிராமசபைக் கூட்டம், உங்கள் தொகுதியில் ஸ்டாலின் என பல்வேறு கட்டங்களாக பிரசாரம் மேற்கொண்டு எல்லாத் தொகுதி மக்களையும் சந்தித்து தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சிகள் வெற்றி பெற வழிவகை செய்தமை பாராட்டத்தக்கது. எனவே தி.மு.க. வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது.

அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணி, தேர்தல் நேரத்திற்கான கூட்டணி. மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா, நான் இனி ஒருபோதும் பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்துக்கொள்ள மாட்டேன் எனக் கூறினார். ஆனால் அவரது பெயரைச் சொல்லி கட்சியை நடத்துபவர்கள் பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்தனர் என்று குறிப்பிட்டார்.

பேட்டியின்போது ம.தி.மு.க. ஒன்றிய செயலாளர் அய்யா பிள்ளை, தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர் நாகராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

# கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த கர்நாடகாவில் இரவு ஊரடங்கு

கொரோனா பரவலைக் கட்டுக்குள் கொண்டு வரும் வகையில் பெங்களூர், மைசூர் உட்பட 8 நகரங்களில் கர்நாடக அரசு இரவு ஊரடங்கை அமுல்படுத்தியுள்ளது. இந்த ஊரடங்கு தினமும் இரவு 10 மணி முதல் அமுலுக்கு வருகிறது.

இரவு ஊரடங்கை அமுல்படுத்துவது குறித்து பெங்களூர் நகர பொலிஸ் கமிஷனர் கமல்பந்த் காணொலிக் காட்சி மூலம் முக்கிய அதிகாரிகளோடு ஆலோசனை நடத்தினார். பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில், கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் வகையில் இரவு ஊரடங்கு அமுல்படுத்தப்படுகிறது. இதனால் இரவு 9 மணிக்கே கடைகளையும், உணவகங்கள், விடுதிகளை மூடுவதற்கு அதன் உரிமையாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இரவு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு உள்ளதால் யாரும் தேவையின்றி வெளியே நடமாடக் கூடாது. தேவையின்றி வெளியே சுற்றுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இரவு வேலைக்குச் செல்பவர்கள் இரவு 10 மணிக்கு முன்பாக சென்றுவிட வேண்டும். அதுபோல அதிகாலையில் பணி முடிப்பவர்கள் 5 மணிக்குப் பின்னரே வெளியே வர வேண்டும். அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்க மற்றும் வாங்கச் செல்பவர்களுக்கு இந்த ஊரடங்கு நேரத்தில் விலக்கு அளிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# கொரோனா சிகிச்சைக்கான ரெம்டெசிவிர் மருந்து ஏற்றுமதி

## மத்திய அரசு தடை உத்தரவு




கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படும் 'ரெம்டெசிவிர்' மருந்தை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு தடை விதித்துள்ளது.

நாடு முழுவதும் கொரோனா வைரஸின் இரண்டாம் அலை கடுமையாகத் தாக்கி வருகிறது. இதனால், பாதிப்பும் பலியும் நாளுக்கு நாள் கணிசமாக உயர்ந்து வருகிறது. ஏற்கனவே, நாட்டின் பல்வேறு மாநிலங்களில் கொரோனாத் தடுப்பூசிக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், கொரோனா பாதித்த நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப் பயன்படுத் தப்படும், 'ரெம்டெசிவிர்' மருந்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இரண்டாவது அலையின் தாக்கம் அதிகமாக இருப்பதால், அதிகளவிலான நோயா ளிகள் சிகிச்சைக்கு வருவார்கள் என்ற கணிப்பில் தனியார் மருத்துவமனைகளில் இந்த மருந்தினை அதிகளவில் வாங்கி பதுக்கிவிட்டதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. கடைகளில் 800 ரூபா முதல் 1,000 ரூபா வரை விற்கப்படும் இந்த மருந்துக்கு, தனியார் மருத்துவமனைகளில் நோயாளிகளிடமிருந்து 4,500 ரூபா வரை அறவிடப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

இந்நிலையில், இந்த மருந்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு நேற்று தடை விதித்தது. இது தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இந்தியாவில் கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. ஏப்ரல் 11 ஆம் திகதி நிலைவரப்படி, நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 11.08 லட்சமாக உயர்ந்துள்ளது. வரும் நாள்களில் இந்தப் பாதிப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இதனால், ரெம்டெசிவிர் மருந்துக்கான தேவை அதிகரித்துள்ளது. எனவே, இதன் ஏற்றுமதிக்கு மறு உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையில் தடை விதிக்கப்படுகிறது' என கூறப்பட்டுள்ளது.

மத்திய அரசு தனது உத்தரவில், 'ரெம்டெசிவிர் மருந்தைத் தயாரிக்கும் இந்திய நிறுவனங்கள் தங்கள் மருந்தின் விநியோகப்பாளர்கள், கையிருப்பாளர்களின் முழு விவரத்தையும் தங்களின் இணையத்தளத்தில் தெரிவிக்க வேண்டும். இந்த மருந்தைக் கையிருப்பு வைப்பதில் முறைகேடுகள் நடப்பதையும், பதுக்கப்படுவதையும், கள்ளச்சந்தையில் விற்கப்படுவதையும் தடுக்க அரசு அதிகாரிகள், மருந்து ஆய்வாளர்கள் அடிக்கடி ஆய்வுகள் நடத்தி கண்காணிக்க வேண்டும்' எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த 'ஜிலெட் சயன்சஸ்' என்ற நிறுவனத்தின் உரிமத்தில் உள்ள 'ரெம்டெசிவிர்' மருந்தை, இந்தியாவைச் சேர்ந்த 7 மருந்து நிறுவனங்கள் ஒப்பந்த அடிப்படையில் தயாரித்து வருகின்றன. இவை மாதத்துக்கு 38.80 லட்சம் மருந்து அளவைத் தயாரிக்கும் திறனைப் பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலியிடம் ரூ.3,750 கோடிக்கு ஹெலிக்கொப்டர்கள் வாங்கும் ஒப்பந்தம் நிறுத்திவைப்பு; துருக்கி அறிவிப்பு



ஐரோப்பிய கவுன்ஸில் தலைவர் சார்லஸ் மைக்கேல் மற்றும் ஐரோப்பிய ஆணைய தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகிய இருவரும் அண்மையில் துருக்கி நாட்டுக்குச் சென்றிருந்தனர்.

அங்கு இவர்கள் இருவரும் தலைநகர் அங்காராவில் அந்த நாட்டின் அதிபர் தாயீப் எர்டோகனை சந்தித்தனர்.

அப்போது சந்திப்பு நடந்த இடத்தில் 3 நாற்காலிகளுக்கு பதிலாக 2 நாற்காலிகள் மட்டுமே போடப்பட்டிருந்தனவாக கூறப்படுகிறது. இதனால் ஐரோப்பிய ஆணைய தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் தனியாக நின்றார்.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை கிளப்பியது. அதிபர் தாயீப் எர்டோகன் வேண்டுமென்றே ஐரோப்பிய தலைவர்களை அவமதித்தார் எனக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த இத்தாலி பிரதமர் மரியோ டிராகி, துருக்கி அதிபர் தாயீப் எர்டோகனை சர்வாதிகாரி என்றும் அவரது நடத்தை பொருத்தமற்றது என்றும் சாடினார். இது இரு நாடுகளின் தூதரக உறவில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது. இத்தாலி பிரதமர் தனது பேச்சுக்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும் என துருக்கி அதிகாரிகள் பலரும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த விவகாரத்தின் எதிரொலியாக இத்தாலியிடம் இருந்து 83 மில்லியன் அமெரிக்க டாலர் இலங்கை மதிப்பில் ரூ.3,750 கோடி) மதிப்பில் பயிற்சி ஹெலிக்கொப்டர்களை வாங்கும் ஒப்பந்தத்தை முடக்கி வைப்பதாக துருக்கி அறிவித்துள்ளது. துருக்கியின் இந்த அதிரடி நடவடிக்கை இரு நாடுகளின் உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம் இது குறித்து இத்தாலி உடனடியாக எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

## பிரான்சை துரத்தும் கொரோனா பாதிப்பு 50 லட்சத்தை தாண்டியது



கொரோனா வைரஸ் தாக்குதலின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கொரோனா பாதிப்பில் முதலிடத்தில் அமெரிக்காவும், இரண்டாம் இடத்தில் பிரேஸிலும், மூன்றாவது இடத்தில் இந்தியாவும் உள்ளன.

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகள் வரிசையில் பிரான்ஸ் தற்போது 4 ஆவது இடத்தில் நீடிக்கிறது.

இந்நிலையில், பிரான்ஸில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 50 லட்சத்து 23 ஆயிரத்து 785 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், கொரோனாவால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 1 லட்சத்து 3 ஆயிரத்து 602 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று இதுவரை 3 லட்சத்துக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர். தற்போது 46 லட்சத்து 21ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொரோனாத் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## இளவரசர் பிலிப் இறுதிச்சடங்கு நிகழ்வில் இங்கிலாந்து பிரதமர் பங்கேற்க மாட்டார்



இங்கிலாந்து இளவரசர் பிலிப்பின் இறுதிச் சடங்கு ஏப்ரல் 17 ஆம் திகதி வின்ஸ்டர் கோட்டை மைதானத்தில் நடைபெறும். கொரோனா காலகட்டம் நிலவுவதால் 30 பேர் மட்டுமே அதில் பங்கேற்க முடியும் என பக்கிங்காம் அரண்மனை அறிவிப்பு வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், பிரதமர் போரிஸ் ஜான்சன் இந்த இறுதிச்சடங்கில் கலந்து கொள்ள மாட்டார் என தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் கடுமையான கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் முடிந்தவரை அரச குடும்ப உறுப்பினர்களுக்கு இடமளிக்கும் வகையில் இளவரசர் பிலிப் இறுதிச்சடங்கில் பிரதமர் போரிஸ் ஜான்சன் கலந்து கொள்ளமாட்டார் என தகவல்கள் வெளியாகின.

இதுதொடர்பாக பிரதமர் போரிஸ் ஜான்சன் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரச குடும்பத்தின் தேவைக்கு ஏற்ப செயல்பட விரும்பினேன். அரச குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அதிக அளவில் கலந்து கொள்ள வேண்டும் என்பதால் நான் அதில் கலந்து கொள்ளவில்லை என தெரிவித்துள்ளார்.

## வடகொரியா அதிபராக கிம் ஜாங் உன் பதவியேற்று 9 ஆண்டுகள் நிறைவு

வடகொரியாவின் அதிபராக கிம் ஜாங் உன் பதவியேற்று, 9 ஆண்டுகள் நிறைவடைந்ததை கொண்டாடும் விதமாக அவரது



சாதனைகளை விளக்கும் புகைப்பட கண்காட்சி நடத்தப்பட்டது.

தமது தந்தையின் மறைவைத் தொடர்ந்து, கடந்த 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 ஆம் திகதி வடகொரியாவின் அதிபராக, கிம் ஜாங் உன் பதவியேற்றுக்கொண்டார்.

இந்நிலையில் கிம் அதிபராகி 9 ஆண்டுகள் நிறைவடைந்ததை கொண்டாடும் விதமாக பியோங்யாங்கில் உள்ள அரண்மனையில் புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.




## ஆஸ்திரேலியாவில் செரோஜா புயலால் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைவு

மேற்கு ஆஸ்திரேலியாவை தாக்கிய செரோஜா எனும் சக்தி வாய்ந்த புயலால், ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன.

செரோஜா புயல் கரையைக் கடந்த போது, கல்பாரி (Kalbarri) ஜெரால்டன் (Geraldton) உள்ளிட்ட கடற்கரையோர ஊர்களில் மணிக்கு 170 கிலோ மீற்றர் வேகத்தில் சூறைக் காற்றுடன் கூடிய கனமழை பெய்தது.

கனமழைக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புயல் பாதித்த பகுதிகளில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு, மீட்பு நடவடிக்கைத் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இதனிடையே, மேற்கு ஆஸ்திரேலியாவில் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஸ்காட் மோரிசன் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# வைத்தியசாலையில் பயிரிடப்பட்ட மஞ்சள் கிழங்குகள் அறுவடை

அம்பாறை, ஏப். 12

அம்பாறை மாவட்டம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் பயிரிடப்பட்டிருந்த மஞ்சள் செய்கை, வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எப். ரஹ்மான் தலைமையில் நேற்று முன்தினம் அறுவடை செய்யப்பட்டது.

சுமார் 25 கிலோகிராம் அளவிலான மஞ்சள் இதன் போது அறுவடை செய்யப்பட்டதுடன், இவ் அறுவடை நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் வைத்தியசாலை வளாகத்தில் பயன் தரும் செடிவகைகள் பல பயிரிடப்பட்டுள்ளதுடன், இதேவேளை கடந்த வருடங்களில் தேசிய ரீதியில் இவ் வைத்தியசாலைக்கு ஜனாதிபதி சுற்றுச் சூழல் விருது, தேசிய தூய்மை உற்பத்தி விருது ஆகியவற்றில் சான்றிதழ் மற்றும் பதக்கம் என்பன கிடைக்கப்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதியில் இயங்கிய போலி ஆவணங்கள் தயாரிப்பு நிலையம் முற்றுகை

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் போலி ஆவணங்கள் தயாரிப்பு நிலையம் ஒன்றை நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்றுகையிட்ட காவற்துறையினர் ஒருவரை கைது செய்ததுடன் மடிக்கணனி, பிறிண்டர் மற்றும் போலி ஆவணங்கள் என்பனவற்றையும் மீட்டுள்ளதாக தெரிவித்தனர்.

காவற்துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று இரவு வாழைச்சேனை காவற்துறை பிரிவிலுள்ள பிறைந்துரைச்சேனை பகுதியிலுள்ள குறித்த வீட்டை சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர்.

இதன்போது கனரக வாகன பயிற்சி நெறிக்கான ஆவணங்கள் உட்பட பல ஆவணங்கள் தயாரிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 44 வயதுடைய ஒருவரை கைது செய்ததுடன் ஆவணத்தயாரிப்பதற்கான மடிக் கணனி, பிறிண்டர், மற்றும் காகித அட்டைகள் என்பனவற்றை மீட்டுள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை காவற்துறையினர் மேற்கொண்டுவருகின்றனர்.

# 3 பெண்பிள்ளைகளின் தந்தை சத்தியாக்கிரகப் போராட்டம்

தனக்கு அரசினால் வீடு வழங்கப்பட வேண்டும் என்றுகோரி மூன்று பெண்பிள்ளைகளின் தந்தையொருவர் உடம்பில் மண்ணெண்ணெயை ஊற்றி தீப்பெட்டியுடன் மின்கம்பத்தில் ஏறி சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடாத்தினார்.

இச்சம்பவம் அம்பாறையை அடுத்துள்ள வளத்தாப்பிட்டி கிராமத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

வளத்தாப்பிட்டியைச் சேர்ந்த சண்முகம் சந்திரகுமார்(வயது40) என்பவரே இவ்விதம் மின்கம்பத்தில் ஏறி சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டவராவார்.

சம்மாந்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிஜயலத், சம்மாந்துறைபிரதேச செயலக கணக்காளர் பாரீஸ், சமுர்த்தி தலைமை அலுவலக அதிகாரி சலீம், கிராம சேவை உத்தியோகத்தர் கே.ரவி, இராணுவம் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இணைந்து அவரை இறக்குவதற்கு கடும் முயற்சிகளையும் பிரார்த்தனைகளும் மேற்கொண்டனர்.

தனக்கு நீதி வேண்டும். அரச உத்தியோகத்தர்கள் கடமையை சரியாகச் செய்வேண்டும். தனக்கு ஒரு வீட்டினை அரசின் மூலம் பெற்றுக் கொடுக்க வேண்டும் அத்தோடு கிராம சேவகர் தனிப்பட்ட வீட்டில் அலுவலகத்தை அமைக்காமல் பொது இடத்தில் இருக்க வேண்டும் கிராம பொதுக் கட்டடத்தில் கிராம சேவகர் மற்றும் சமுர்த்தி அலுவலகங்கள் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றினால் மட்டுமே தான் இறங்குவார் என மேலிருந்து கூறினார்.

எதற்கும் இறங்குங்கள் என்று கூறிய போதிலும் அவர் செவிசாய்க்கவில்லை. அதனிடையே அவரது மனைவி 3 பெண்பிள்ளைகள் கீழிருந்து அழுதவண்ணம் கத்திக் கொண்டு நின்றனர். பிரதான வீதி என்பதால் வாகனங்கள் சனக்கூட்டம் நிரம்பிவிட்டது. சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளரும் சுகட்சி அமைப்பாளருமான வி.ஜெயச்சந்திரன் கலந்துகொண்டு முயற்சியெடுத்தார்.

சுமார் 4மணியளவில் மின்கம்பத்தில் ஏறியவர் 7.15வரை அங்கிருந்து தமது கோரிக்கையை முன்வைத்து இறங்காமல் அடம்பிடித்தார்.

பழையவளத்தாப்பிட்டி, புதிய வளத்தாப்பிட்டி, இஸ்மாயில்புரம், பழவெளி ஆகிய நான்கு கிராமங்களின் 1,200 குடும்பங்களைக் கவனிக்கவேண்டிய கிராம உத்தியோகத்தர் கேரவியின் முயற்சியால் வீடு பெற்றுத்தருவதாக உறுதியளித்தைத் தொடர்ந்து போராட்டம் இறுதிக்கட்டத்திற்கு வந்தது.

இறுதியில் தாம் கைப்பட எழுதி வீடு தருவதாக கிராமசேவை உத்தியோகத்தர் கி.ரவி உறுதியளித்ததன் பேரில் 7.15மணியளவில் கீழிறங்கினார்.

கீழிறங்கியதும் வீடு ஒன்று சமுர்த்தி திட்டத்தின் கீழ் பெற்றுத்தருவதாக கடிதம் எழுதி சமுர்த்தி தலைமையக அதிகாரி சலீம் ஒப்பமிட்டு சாட்சிக்கு இருவர் ஒப்பமிட்டுக் கொடுத்த பின்னர் அப்போராட்டம் முடிவுக்கு வந்தது.

# கடைக்குச் சென்ற சிறுமியின் மீது மோட்டார் சைக்கிள் மோதி விபத்து

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிளொன்று கடைக்குச்சென்ற சிறுமி மீது மோதி விபத்துக்குள்ளானதில் சிறுமி பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் கந்தளாய் தள வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

பேராறு பகுதியைச் சேர்ந்த 12 வயதுடைய சிறுமியொருவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கந்தளாய் பேராறு பிரதான வீதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும், கடையில் பொருள்களை வாங்கிக்கொண்டு வீதியை கடக்க முற்பட்ட போதே வேகமாக சென்ற மோட்டார் சைக்கிள் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கிறனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இலவச வைத்திய முகாம்




அக்கரைப்பற்று விபுலானந்தா சிறுவர் இல்ல மாணவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்ட முதியவர்களுக்கான இலவச வைத்திய முகாம் விபுலானந்தா சிறுவர் இல்ல மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஒலிவியா தனியார் வைத்தியசாலை ஒன்றினால் முற்றும் முழுதாக இலவசமாக முன்னெடுக்கப்பட்ட குறித்த சேவை மூலம் இல்ல மாணவர்களும் முதியவர்களும் பெரும் நன்மையடைந்தனர்.

குறித்த வைத்தியசாலையின் பணிப்பாளர்களான வைத்தியர் சனூஸ் தலைமையில் இடம்பெற்ற இலவச வைத்திய முகாமில் வைத்தியர் சபீல் மற்றும் வைத்தியர் ரஸ்னிதா வைத்தியர் தனுபர் முகாமையாளர் நியாஸ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

விபுலானந்தா இல்லத்தினுடைய ஸ்தாபகர் த.கயிலாயபிள்ளையின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இம் முகாமினூடாக மாணவர்களும் இயக்குநர் சபை உள்ளிட்ட பொதுமக்களும் சிகிச்சை பெற்றுக்கொண்டதுடன் மேலதிகமான சிகிச்சை பெறுதல் மற்றும் வைத்திய நிபுணர்களை சந்திக்கும் வாய்ப்பினையும் குறித்த வைத்தியசாலையின் நிருவாகம் இலவசமாக இதன் போது பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது .

# 6 புதிய மடிக்கணனிகளை களவாடிய 5 இளைஞர்களுக்கு விளக்கமறியல்

பாடசாலை ஒன்றின் அதிபரின் காரியாலயத்தை உடைத்து 6 புதிய மடிக்கணனிகளை களவாடிய ஐந்து சந்தேகநபர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் ஐ.என் றிஸ்வான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2021-04-05 ஆம் திகதி அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை அல் முனீர் பாடசாலை அதிபர் காரியாலயத்தினை உடைத்து அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த ரூபா 150,000 பெறுமதியான தலா 6 எச்.பி. வர்க்க மடிக்கணனிகள் களவாடப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.

இதன் அடிப்படையில் கடந்த 2021-04-01 ஆம் திகதி இறுதியாக பாடசாலை நடைபெற்று அனைத்தும் பூட்டப்பட்டிருந்தது. பின்னர் தொடர்ச்சியாக 4 நாள்கள் விடுமுறையின் பின்னர் திங்கட்கிழமை பாடசாலைக்கு சென்ற அதிபர் பாடசாலையை திறக்க முற்பட்டுள்ளதுடன் அதிபர் அறை உடைக்கப்பட்டு புத்தம் புதிய 6 மடிக்கணனிகள் களவாடப்பட்டிருந்ததை அவதானித்துள்ளார்.

இதற்கமைய பொலிஸாரிடம் அதிபர் முறைப்பாடு செய்ததற்கமைய பொலிஸ் குழுவினர் சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 20, 23, 25, 30, வயதுடைய ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து களவாடப்பட்ட 6 மடிக்கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் அனைத்தும் மீட்கப்பட்டன.

குறித்த முறைப்பாட்டிற்கமைய அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரட்நாயக்கவின் கட்டளையின் படி பொலிஸ்குழு விசாரணை மேற்கொண்டிருந்தது.

தொடர்ந்து நேற்று சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து சந்தேக நபர்கள் ஐவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐ.பி.எல். 2021 3 ஆவது போட்டியில் ஹைதராபாத்தை வென்றது கொல்கத்தா

ஐ.பி.எல். 2021 தொடரின் மூன்றாவது லீக் போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 10 ஓட்டங்களால் சன்ரைசஸ் ஹைதராபாத் அணியை வென்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சன்ரைசஸ் ஹைதராபாத் அணி, முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது. நிதிஷ் ரணா 80 ஓட்டங்களையும் ராகுல் திரிபத்தி 53 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். சன்ரைசஸ் ஹைதராபாத் அணியின் மொஹமட் நபி மற்றும் ரஷிட் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

188 என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய சன்ரைசஸ் ஹைதராபாத் அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 177 ஓட்டங்களையேபெற முடிந்தது. கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 10 ஓட்டங்களால் வெற்றியைத் தனதாக்கியது. சன்ரைஸின் மனிஷ் பாண்டே ஆட்டமிழக்காது 61 ஓட்டங்களையும் ஜொனி பெயர்ஸ்டோ 55 ஓட்டங்களையும் பெற்றனர். கொல்கத்தா அணியின் பிரசீட் கிருஸ்ணா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப் போட்டியின் நாயகனாக 56 பந்துகளில் 80 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட நிதிஷ் ராணா தெரிவு செய்யப்பட்டார்.

# டோனிக்கு இதுதான் கடைசி ஐ.பி.எல்லா? சி.எஸ்.கே. நிர்வாகி பதில்!




டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 2020 ஆம் ஆண்டைத் தவிர மற்ற அனைத்து வருடங்களும் பிளே ஆஃப் சுற்றுக்கு முன்னேறியிருந்தது. ஆனால், கடந்த சீசனில் படுமோசமாக விளையாடி, முதல்முறையாக பிளே ஆஃப் செல்லும் வாய்ப்பை இழந்தது. டோனியும் அந்தத் தொடரில் துடுப்பாட்டத்தில் சிறப்பாக சோபிக்கவில்லை.

இதனால், டோனி விரைவில் ஐ.பி.எல்லிலிருந்தும் ஓய்வை அறிவித்துவிடுவார் என்று அப்போது பரவலாகக் கருத்துகள் நிலவின. ஆனால், அந்தத் தொடரின் இறுதி லீக் போட்டி முடிந்த பிறகு பேசிய டோனி, நான் அடுத்த சீசனில் பங்கேற்பது உறுதி எனத் தெரிவித்திருந்தார்.

தற்போது 14ஆவது சீசன் இல் சென்னை அணி தனது முதல் லீக் போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை எதிர்கொண்டு தோல்வியடைந்துள்ளது. இப்போட்டியில் டோனியும் 2 பந்துகளை எதிர்கொண்டு டக் - அவுட் ஆனார். இதனால், ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். எனவே, மீண்டும் டோனி இந்த சீசனுடன் ஓய்வுபெற்றுவிடுவார் என்று சமூக வலைத்தளங்களில் பலரும் பதிவிட்டு வருகிறார்கள்.

இந்நிலையில், தற்போது ஊடகமொன்றுக்குப் பேட்டி கொடுத்துள்ள சி.எஸ்.கே. தலைமை நிர்வாக அதிகாரி காசி விஸ்வநாதன், டோனி குறித்து சில தகவல்களைப் பகிர்ந்துகொண்டுள்ளார். எனக்குத் தெரிந்த வகையில் டோனி அடுத்த சீசனிலும் நிச்சயம் பங்கேற்பார். அவருக்கான மாற்று வீரர் குறித்து நாங்கள் இதுவரை எந்தப் பரிசீலனையும் செய்யவில்லை. அணியில் சில முக்கிய பந்துவீச்சாளர்கள் இடம்பெறாதது தான் முதல் போட்டியின் தோல்விக்குக் காரணம். அணி முழுமையடைந்ததும் சிறப்பாகச் செயல்படும் என்ற நம்பிக்கையுள்ளது. டோனியால் எப்பேர்ப்பட்ட நிலையிலும் அணியைத் திறம்பட வழிநடத்த முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# ஐ.பி.எல். 2021 - இன்றைய போட்டியில் ராஜஸ்தான் - பஞ்சாப் அணிகள் மோதுகின்றன!

ஐ.பி.எல். 2021 தொடரின் நான்காவது லீக் போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும் பஞ்சாப் கிங்ஸ் அணியும் இன்று மோதவுள்ளன.

மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில், பஞ்சாப் அணிக்கு கே.எல். ராகுலும் ராஜஸ்தான் அணிக்கு சஞ்சு சம்சனும் தலைமை தாங்கவுள்ளனர். இரு அணிகளும் இதுவரை 21 முறை மோதியுள்ளன. இதில் 9 முறை பஞ்சாப் அணியும் 12 முறை ராஜஸ்தான் அணியும் வெற்றிபெற்றுள்ளன.

இரு அணிகளிலும் பல பிரபலமான வீரர்கள் இருப்பதால் இப்போட்டி பற்றிய எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே காணப்படுகிறது. போட்டி இலங்கை நேரப்படி இரவு 7.30க்கு ஆரம்பமாகிறது.

# இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடர் அஸ்டன் வில்லாவை வீழ்த்தியது லிவர்பூல்




இங்கிலாந்து நாட்டில் நடைபெற்று வரும் பிரீமியர் லீக் கால் பந்தாட்டத் தொடரில் நடப்பு சம்பியனான லிவர்பூல் அணியும் புள்ளிப் பட்டியலில் 10 ஆவது இடத்தில் இருக்கும் அஸ்டன் வில்லா அணியும் மோதின.

கடுமையான தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்ட லிவர்பூல் அணி நிச்சயம் கோல் போடும் என்று எதிர்பார்த்த நிலையில் 43 ஆவது நிமிடத்தில் அஸ்டன் வில்லா அணியின் மெகின் கொடுத்த பந்தை வட்கின்ஸ் கோலாக மாற்றி அணியை முன்னிலை பெறச் செய்தார். போட்டியின் முதல் பாதி 1 - 0 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதியை மும்முரமாகத் தொடங்கிய லிவர்பூல் அணியின் சாலா 57 ஆவது நிமிடத்தில் கோல் அடித்து ஆட்டத்தை சமன் செய்தார். முதல் பாதியை விட இரண்டாம் பாதியில் லிவர்பூல் அணியின் தடுப்பாட்டம் சிறப்பாக இருந்த காரணத்தால் எதிரணியால் இலகுவாக வாய்ப்புகளை ஏற்படுத்திட இயலவில்லை.

1 - 1 என்ற சமநிலை முடிவை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் அர்னால்ட் கோல் அடித்து லிவர்பூல் அணியை 2 -1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெறச் செய்தார். சமீபத்தில் இங்கிலாந்து அணியில் இருந்து வெளியேற்றப்பட்ட அர்னால்ட் இந்தப் போட்டியில் கோல் அடித்து தனது ரசிகர்களுக்கு உற்சாகமளித்தார்.

இவ்விரண்டு அணிகளும் மோதிய முதல் ஆட்டத்தில் அஸ்டன் வில்லா அணி 7 - 2 என்ற கோல் கணக்கில் அபார வெற்றியைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியின் மூலம் செல்சீ மற்றும் வெஸ்ட் ஹாம் ஆகிய அணிகளைப் பின்னுக்குத்தள்ளி நான்காம் இடத்திற்கு முன்னேறியுள்ளது லிவர்பூல்.

# சிரி ஏ கால்பந்தாட்டத் தொடர் ஏசி மிலான் அணிக்கு வெற்றி!

இத்தாலி நாட்டில் நடைபெற்று வரும் சிரி ஏ கால்பந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று அதிகாலை நடைபெற்று முடிந்த ஆட்டத்தில் புள்ளிப் பட்டியலில் இரண்டாம் இடத்தில் இருக்கும் ஏசி மிலான் அணியும் 19 ஆவது இடத்தில் இருக்கும் பர்மா அணியும் மோதின.

இவ்விரு அணிகள் மோதிய முதல் ஆட்டம் 2 - 2 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது.

எதிரணியை சற்றும் சிந்திக்க விடாமல் மிலான் அணி ஆட்டத்தை வேகமாகத் தொடங்கியது. கடுமையான தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்ட மிலான் அணிக்கு ஆட்டத்தின் எட்டாவது நிமிடத்தில் சிலாட்டன் கொடுத்த பந்தினை கோலாக மாற்றினார் ரெபிச்.

ஒரு கோல் முன்னிலை பெற்ற மிலான் அணி தொடர்ச்சியாக தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டு வந்தது. பர்மா அணி மிலான் அணியின் தாக்குதல்களை சமாளிக்க திணறியது. முதல் பாதியின் கடைசி நிமிடத்தில் தியோ கொடுத்த பந்தை கெஸ்ஸி கோலாக மாற்றி முதல் பாதியின் முடிவில் மிலான் அணியை 2 - 0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெறச் செய்தார்.

ஆட்டத்தின் அறுபதாவது நிமிடத்தில் மிலான் அணியின் நட்சத்திர வீரரான சிலாட்டான் நடுவரிடம் முறையற்று நடந்தமைக்காக அவருக்கு சிவப்பு அட்டை வழங்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். இது மிலான் அணிக்கு பெரும் பின்னடைவாக அமைந்தது. இதனால் எஞ்சியிருக்கும் 10 வீரர்களும் முற்றிலுமாக தடுப்பு ஆட்டத்தில் கவனம் செலுத்தவேண்டி நேர்ந்தது.

ஆட்டத்தின் 66 ஆவது நிமிடத்தில் பர்மா அணியின் ரிக்கார்டோ கோல் அடித்து எண்ணிக்கை வித்தியாசத்தை ஒன்றாக குறைத்தார். ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் மிலான் அணியின் லியாவ் அணியின் மூன்றாவது கோலைப் பதிவு செய்து மிலான் அணியை 3 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெறச் செய்தார். இந்த வெற்றியின் மூலம் ஏசி மிலான் அணி புள்ளிப் பட்டியலில் இரண்டாம் இடத்தை தக்கவைத்துக் கொண்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவிலிருந்து கட்சிமாறியோருக்கு பொது மன்னிப்புக் கால அவகாசம்

## வஜிர அபேவர்த்தன கட்சி செயற்குழுவில் யோசனை



ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி வேறு கட்சிகளில் இணைந்துள்ள உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு பொது மன்னிப்பு காலத்தை வழங்கும் யோசனையை அந்த கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன, கட்சியின் செயற்குழுவில் முன்வைத்துள்ளார் என தெரியவருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி சென்று சஜித் பிரேமதாஸ தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தி கட்சியையே அவர் வேறு கட்சி எனக் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி வேறு கட்சியுடன் இணைந்துள்ளவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாகப் பொது மன்னிப்பு காலத்தை வழங்கும் யோசனையை அவர், ஆவணங்களுடன் செயற்குழுவில் சமர்ப்பித்துள்ளார்.

இந்த யோசனைக்கு செயற்குழுவின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த செயற்குழுக் கூட்டத்தில், மத்திய வங்கியின் பிணைமுறி முறைகேடு சம்பந்தமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுதலையாகியுள்ள முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் கலந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோழி இறைச்சி விலை அதிகரிக்கப்படவில்லை

## என்கிறார் பந்துல



பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கப் படமாட்டாது. விலை அதிகரிப்பிற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

நிர்ணய விலைக்கு அதிகமான விலையில் விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் தொடர்பில் நுகர்வோர் 1998 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக முறைப்பாடு செய்யலாம். விற்பனை நிலையங்கள் தொடர்பில் கண்காணிக்க நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வர்த்தகத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

எதிர்வரும் காலங்களில் எந்தக் காரணிகளுக்காகவும் கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கப் படமாட்டாது. பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கோழி இறைச்சியின் விலையை அதிகரிக்குமாறு அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தினர் முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. விலை அதிகரிப்பிற்கு எத்தரப்பினருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

கோழி இறைச்சி விலை தொடர்பில் 2020 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. சந்தையில் தோல் நீக்கப்படாத ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியின் விலை 430 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும்.

தோல் நீக்கப்படாத ஒரு கிலோ கோழி இறைச்சி சதொச விற்பனை நிலையங்களில் 400 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும்.

கோழி இறைச்சியின் நிர்ணய விலை தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு தரப்பினர் அதிக விலைக்கு கோழி இறைச்சியை விற்பனை செய்வதாக அறிய முடிகிறது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாகவும் நுகர்வோர் 1998 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அழைத்து முறைப்பாடு செய்ய முடியும்.

சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருள்கள், விலை தொடர்பில் ஆராய நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.

கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமான விலையில் பொருள்களை விற்பனை செய்யும் விற்பனையாளர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

# மே மாதத்தில் மூன்றாம் அலை நாட்டைத் தாக்கும் அபாயம்

## தொடரும் எச்சரிக்கை

புதுவருட நிகழ்வுகளின்போது பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களைக் கவனத்தில் கொள்ளாமை காரணமாக கொவிட் வைரஸின் மூன்றாம் அலை எதிர்வரும் மே மாதத்தில் நாட்டைத் தாக்கும் என்று பொதுச் சுகாதாரக் கண்காணிப்பாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

பல தடவைகள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும் பொதுமக்கள் நாளாந்த வாழ்க்கையில் கொவிட் தொற்றுக்கு எதிரான சுகாதார வழிகாட்டுதல்களைப் புறக்கணித்து வருகின்றனர்.

திருமதி இலங்கை அழகுராணி, சுற்றாடல் பிரச்சினை, எண்ணெய்ப் பிரச்சினை ஆகியவற்றால் மிகத்தீவிரமான கொவிட் வைரஸ் பிரச்சினை மறைக்கப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார கண்காணிப்பாளர்கள் சங்கத்தின் செயலாளர் மஹேந்திர பாலசூரிய தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இதன் விளைவாக கொவிட் தொற்று இயல்பு நிலைக்கு வந்து விட்டது என்று பொதுமக்கள் கருதுகின்றனர்.

இந்த நிலையில் கொவிட் தொடர்பான அச்சத்தை மீண்டும் ஒரு முறை பொதுமக்களிடையே ஏற்படுத்துவது கடினம். இது மிகவும் துரதிஷ்டவசமானது.

# சங்கமன்கண்டி மயானத்தில் புத்தர்சிலை அமைக்க முயற்சி

பொத்துவில் பிரதேசத்திலுள்ள சங்கமண்கண்டிக்கிராம மயானப்பகுதியில் புத்தர்சிலை அமைக்க மீண்டும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது .இப்பிரச்சினையை தீர்த்து வைக்கும் முகமாக பொத்துவில் பிரதேச செயலாளர் சந்தருபவன் அனுருத்த 9 ஆம் திகதி சங்கமன்கண்டி கிராம மக்கள் மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டமொன்றை நடாத்தினார்.

கூட்டத்தில் பொத்துவில் முகுது மகா விகாரை பௌத்தபிக்கு தலைமையிலான குழுவினர், வன பரிபாலனபகுதியினர் ,தொல் பொருளியல் பகுதியினர், கிராமசேவையாளர், பொருளாதாரஅபிவிருத்தி உத்தியோகத்தர், பொதுமக்கள் என பலதரப்பட்டவர்களும் கலந்து கொண்டனர்.

புத்தர்சிலை அமைப்பது தொடர்பில் கருத்துக்கள் பரிமாறினர். த.தே.கூட்டமைப்பின் பொத்துவில் பிரதேசசபை உறுப்பினர் த.சுபோதரன் அங்கு மக்களுடன் சமுகமளித்து அங்குவந்த பிக்குமாரிடம் நியாயத்தை எடுத்துரைத்தார். பிரதேச செயலாளர் கூறுகையில் மக்கள் விரும்பினால் மட்டுமே எதனையும் செய்யலாம் .மக்கள் விரும்பாததை நான் செய்யமுடியாது என்று கூறியதும் முயற்சி கைவிடப்பட்டுள்ளது .









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org